இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்திச் செயற்திட்டம் (எஸ்ஈயூடீபீ) - கட்டம் 1பீ இன் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட 2011 திசெம்பர் 20 ஆம் திகதிய 836 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் உயர் கல்வி அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. அம்பாறை மாவட்டத்தில் உள்ள தென் கிழக்கு பல்கலைக்கழகத்தினை அபிவிருத்தி செய்வதற்காக பிரதேச, தேசிய ரீதியான தேவைகளைப் பிரதிபலிக்கின்ற செம்மையான பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதன் மூலம் இலங்கையின் சமூக, அபிவிருத்தி மற்றும் பொருளியல் வளர்ச்சிக்கு உதவி செய்தலும், அதே நேரம் தேவையான கல்விசார் அபிவிருத்தி திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் மூலமும் கேள்வி ஆற்றல் மிக்க பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் மாணவர் தொகையை அதிகரித்தல் என்பனவே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். இவ் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது புதிய பீடக் கட்டிடங்கள், நூல் நிலையம், கற்றல் வள நிலையம், மாணவர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட வசதிகள் நலனோம்பு வசதிகள் போன்றவற்றை நிர்மாணிப்பதற்குரிய வசதிகளை வழங்குகின்றது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,660 மில்லியன்களுக்கு சமனான குவைத் தினார் 3.5 மில்லியன் ஆகும். அதில் ரூபா 1,421 மில்லியனுக்குச் சமனான குவைத் தினார் 3 மில்லியனை நிதியளிப்பதற்கு அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியம் உடன்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2012 செப்தெம்பர் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்ய வேண்டுமென பட்டியலிடப்பட்டுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில்

கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளிற்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்பதும், மற்றும்

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2014 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டினுள் | 2014 திசெம்பர் 31 வரை | |
| | குவைத் தினார் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | குவைத் தினார் மில்லியன் | ரூபா மில்லியன் |
| குவைத் நிதியம் | 3.00 | 1,421.57 | 230.00 | 219.55 | 0.51 | 240.07 |
| இலங்கை அரசாங்கம் | 0.50 | 238.48 | 37.00 | 34.07 | 0.09 | 43.50 |
| **மொத்தம்** | **3.50** | **1,660.05** | **267.00** | **253.62** | **0.60** | **283.57** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). ஒதுக்கப்பட்ட வளங்களை முழுமையான செயற்திட்டக் காலத்தினையும் உள்ளடக்கியதாக மாதாந்த, காலாண்டு, அரையாண்டு ரீதியில் நிதி மற்றும் பௌதீக ரீதியான இலக்குடன் முழுமையான விபரமான நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் இச் செயற்திட்டத்தின் செயலாற்றலை நடவடிக்கைத்திட்டத்துடன் ஒப்பிட்டு மதிப்பாய்வு செய்யக்கூடிய வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்திட்டத்தால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii). மேற்குறித்த தகவலின் பிரகாரம், 70 சதவீதமான செயற்திட்டக் காலம் கடந்த நிலையில் ஒதுக்கப்பட்ட நிதிகளில் 17 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. துரிதமான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லையெனின் செயற்திட்டப்பணிகளை குறித்த காலத்தினுள் பூர்த்தி செய்ய இயலாதிருக்கும்.

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டக்காலமானது ஒரு வருடத்தினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டிருந்த போதிலும், கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு 2015 மார்ச் 31 இல் உள்ளவாறான 05 சிவில் கட்டுமாண பணிகள் 16 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையான வீச்சிலான மந்தகதியான முன்னேற்றத்தை காட்டின.

| விபரம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | 2015 மார்ச் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|---|
| | | செலவிடப்பட்ட கிரயம் | நிதி முன்னேற்றம் | பௌதீக முன்னேற்றம் |
| | ரூபா | ரூபா | % | % |
| ஒலுவிலிலுள்ள மாணவர் விடுதி | 263,886,709 | 105,835,943 | 40 | 32 |
| சம்மாந்துறையிலுள்ள மாணவர் விடுதி | 117,558,557 | 41,135,791 | 35 | 30 |
| கல்விசார் நிகழ்ச்சித்திட்ட நிதியம் | 64,850,953 | 26,929,975 | 42 | 40 |
| நீரியல்வள இரசாயன கூடம் | 263,334,385 | 62,453,725 | 24 | 16 |
| உத்தியோகபூர்வ இல்லங்கள் | 173,129,132 | 42,048,669 | 24 | 16 |

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, வடிவமைப்பு நோக்கங்களுக்காக ரூபா 5.91 மில்லியன் கூட்டுத்தொகையான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதியுரை கட்டணங்கள் செலவிடப்பட்டிருந்த போதிலும், பொது போசனசாலைக்கான கட்டிடம், விளையாட்டுத்திடல், கூடாரம் மற்றும் மண்டபம் ஆகியவற்றின் நிர்மாண பணிகள் 2015 மார்ச் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

2014 ஏப்ரல் 28 ஆந் திகதி முதல் 2014 மே 07 அந் திகதி வரை யூ.எஸ்.ஏ இல் இடம்பெற்ற மாநாட்டில் பங்குபற்றுவதற்காக, அது தொடர்பில் ஒதுக்கீடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிராத போதிலும், செயற்திட்டத்தின் பணிப்பாளரின் பிரயாணம் மற்றும் பொருட்களுக்காக ரூபா 1.0 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.